பேர்களுக்கும் அதிகமாக மக்கள் உள்ள நகரங்களை விரிவுபடுத்தவும், அழகுபடுத்தவும் அவர்கள் தொகை தருகிறார்கள். வேறு எந்தத் திட்டமும் என் கவனத்தில் இல்லை.

New buses for express services

*69 *Q.*—THIRU DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether the Government have any proposal to replace all the old express buses with new ones; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: விரைவுப் பேருந்துகள் 2 அல்லது 3 ஆண்டுகள் ஓடிய பிறகு அல்லது 1,15,000 மைல்கள் ஓடி முடித்த பிறகு அகற்றப்பட்டு அவற்றிற்குப் பதிலாக புதிய பேருந்துகளை விடுவது என்று துறை முடிவு செய்துள்ளது. ஆகவே, அதற்கேற்றவாறும் தேவைப்படும்போதும் அவை அகற்றப்பட்டு அவற்றிற்குப் பதிலாகப் புதிய பேருந்துகள் விடப்படும்.

DR. H. V. HANDE: Sir, will the Hon. Minister consider the proposal to replace old long distance buses by new buses? If necessary, they can be transferred to short distance routes. Then only the passengers can be sure of reaching their destination. There was such a proposal under the consideration of the previous Ministry. So, will the Government consider that the safety and dependability of the long distance passengers are properly looked after by the department concerned?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த அந்தக் கருத்தின்படியேதான் புதிதாக வாங்கப்படுகின்ற பேருந்துகளை முதலில் நீண்ட வழித்தடங்களிலும் ஓராண்டு, அல்லது ஈராண்டுகள் ஆனபிறகு அதே பேருந்துகளை மாவட்ட வழித் தடங்களிலும், நகர வழித் தடங்களிலும் விடுவது என்றும் பிறகு மாற்றிவிடுவது என்றும், ஆக, நீண்ட வழித் தடங்களில் புதிய பேருந்துகளை விடுவது என்பதை அரசு கொள்கை அளவிலே ஒத்துக்கொண்டு செயல்படுத்தி வருகிறது.

1973 ஆகஸ்ட் 7]

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, நீண்ட தூர எக்ஸ்பிரஸ் பஸ்களிலே சில நேரம் பேருந்துகள் பழுதாகி விடுகின்றன, டயர் வெடித்து விடுகிறது, சீட்டுகள் வசதிக் குறைவாக இருக்கின்றன. சீட்டுகளை 3, 2 என்று வைத்திருக்கிறார்கள். பழுதுகளை நீக்கி, 2, 2 என்று சீட்டுகளையும் குறைத்து பேருந்துகளைவிட அரசாங்கம் உடனடியாக வேண்டிய ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, சீட்டுகளைப் பொறுத்தவரையிலே குறைத்து, அதிக வசதிகளைப் பயணிகளுக்கு அளிக்க வேண்டுமென்ற அடிப்படையிலே, 3, 2 என்று இருப்பதை 2, 2 என்கின்ற அளவிலே அமைக்கலாம் என்று அரசு திட்டமிட்டு, அப்பணி படிப்படியாக மேற்கொள்ளப் பட்டிருக்கிறது. ஆகவே, அந்தக் கஷ்டங்கள் இனிமேல் இருக்காது. புதிய பேருந்துகளை விடுவதில் போதுமான அளவுக்குப் பேருந்துகள் கிடைக்காத காரணத்தினால் பழைய பேருந்துகள் ஓடிக் கொண்டிருக்கின்றன. கிட்டத்தட்ட 48 பேருந்துகள் மூன்றாண்டுகளுக்கு மேலாக ஓடிக்கொண்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றன. கூடிய விரைவிலே அவைகளும் மாற்றியமைக்கப்படும்.

பள்ளபட்டியில் விரைவுப் பேருந்து பயணச்சீட்டு பதிவு அலுவலகம்

*70 வினு—**திரு. வா. மை. அப்துல் ஜப்பார் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

பள்ளபட்டி நகரில் அரசுப் போக்குவரத்துப் பேருந்துகளுக்கு முன்கூட்டியே பயணச் சீட்டு அளிக்க Booking Stall அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இல்லை.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : சென்ற கூட்டத் தொடரில் சென்னையிலிருந்து பள்ளபட்டி வழியாகப் பழனிக்கு ஒரு துரிதப் பேருந்து விடுவதாக வாக்குறுதி தந்தார்கள். அது இதுவரை நடைமுறைக்கு வரவில்லை. கடந்த 2 ஆண்டுகளாக உள்ள அந்தக் கோரிக்கையை அமைச்சர் அவர்கள் இனியாவது கவனிப்பார்களா?